-8

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 125/ந/2021
நாள். 31.01.2022

திருமதி.M.வஹிதா இக்பால்,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
கோவில்பட்டி நகராட்சி. – எதிர்மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர், வத்தலகுண்டு ரோடு, எண். 17/6, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.M.வஹிதா இக்பால், என்பவரின் **13.12.2021** நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் **15.12.2021** அன்று பெறப்பட்டு **125/2021** எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

**ஆணை**

திண்டுக்கல் மாவட்டம், பேகம்பூர், வத்தலகுண்டு ரோடு, எண். 17/6, என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.M.வஹிதா இக்பால், என்பவர் தனது மனுவில்

"எனது குடும்பத்தினர் பெயர்களில் தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக்கழகத்தின் சார்பாக (Tan Tea) கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட பேருந்து நிலையத்தில் தேநீர் நிலையம் அமைக்க பரிந்துரைக்கப்பட்டு நகராட்சி மற்றும் மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் கோவில்பட்டி பழைய பேருந்து நிலையத்தில் பாக்ஸ் அமைத்து தளம் மற்றும் வயரிங் வேலைகள் முடித்து ஆரம்பிக்கும் தருவாயில் உள்ளது. அங்கு இடையூறு இருப்பதாக கூறி பாக்ஸை அகற்ற நகராட்சி நிர்வாகம் வலியுறுத்தியது. நான் பாக்ஸ் மற்றும் இதர வேலைகளுக்கு அதிகமான பணம் செலவழித்துள்ளேன் என்று கூறியவுடன் பேருந்து நிலையைத்துக்குள்ளேயே மாற்று இடம் தேர்வு செய்ய சொன்னதன் அடிப்படையில் நான் இரண்டு இடங்களை தேர்வு செய்து கொடுத்தேன். அந்த இரண்டு இடத்திலும் வழங்க முடியாது என்றும், பேருந்து நிலையம் வெளிப்புறம் தான் வழங்க முடியும் என்று நகராட்சி நிர்வாகம் கூறியது. எனக்கு அனுமதி வழங்கியது கோவில்பட்டி பழைய

பேருந்துநிலையத்தின் உட்புறம், சென்னை ஆணையாளர் அவர்கள் உத்தரவு (CMA) அலுவலகம் மூலம் வழங்கப்பட்டது. அதை தாங்கள் விசாரணை செய்து எனக்கு பழைய பேருந்து நிலையத்தின் உட்புறம் நான் கேட்ட அந்த இரண்டு இடத்தில் ஏதேனும் ஒரு இடத்தினை எனக்கு வழங்க பரிந்துரை செய்யுமாறு தாங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் திண்டுக்கல் மாநகராட்சிக்கு உட்பட்ட சத்திரம் தெருவில் மாநகராட்சி ஆணையாளரால் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு தேநீர் நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. அங்கும் இதே போல் பாக்ஸ் அமைத்து ஆரம்பிக்கும் சூழ்நிலை வரும் பொழுது போக்குவரத்து இடையூறு இருப்பதாக மாநகராட்சி நிர்வாகம் அந்த பாக்ஸை அகற்றியது. உடனே நான் மதுரை உயர் நீதிமன்ற கிளையை அணுகினேன். நீதிமன்றத்தில் மாநகராட்சி நிர்வாகம் நாங்கள் பாக்ஸை அகற்றவில்லை. பொது மக்களின் அதிருப்தியால் அகற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்று கூறினார்கள். நீதிமன்றத்தில் அதே இடத்தில் அவர்கள் பாக்ஸ் அமைத்து கடை ஆரம்பித்தால் மாநகராட்சி நிர்வாகம் தடை செய்ய கூடாது என்றும், அங்கு மீண்டும் ஏதும் பிரச்சனை ஏற்பட்டால் அவர் சம்மதிக்கும் பட்சத்தில் ஏதேனும் ஒரு இடத்தை வழங்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு அளித்தது. அதற்கு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் நீங்கள் ஏதேனும் மூன்று இடத்தை தேர்வு செய்து கொடுங்கள் என்று எங்களுக்கு ஆணை பிறப்பித்தார். அதன் அடிப்படையில் நான் மூன்று இடத்தை தேர்வு செய்து மாநகராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பித்தேன். அந்த மூன்று இடத்திலும் போக்குவரத்திற்கு இடையூறு இருப்பதாக கூறி மனுவை நிராகரித்தார்கள். நான் உடனே மறுபடியும் நீதி மன்றத்தை அணுகி நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர உள்ளேன். அதனால் தாங்கள் விசாரணை செய்து அந்த மூன்று இடத்தில் ஏதேனும் ஒரு இடத்தை வழங்க பரிந்துரை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2) இப்புகார் மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 20.12.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார். கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் தமது 25.01.2022 நாளிட்ட அறிக்கையில்

- தமிழ்நாடு தேயிலைதோட்ட கழக நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.9537/2017/S4, நாள்.22.01.2021ம் தேதிய கடிதத்திற்கு, கோவில்பட்டி நகர்மன்ற தீர்மானம் எண்.4259, நாள்.29.01.2021ல் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் அறிஞர் அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் 8’ x 8’ அளவில் கடை வைப்பதற்கு உரிய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

- நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4184/2021/ஆர்3, நாள் 25.02.2021ல் அறிஞர் அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் டேன் டீ அமைக்க இடம் மற்றும் மாத வாடகை ரூ.2200/– நிர்ணயம் செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இவ்வலுவலக ந.க.எண்.389/2021/அ3, நாள் 12.07.2021ல் 12 மாத வைப்புத் தொகை செலுத்தக் கோரியும் மற்றும் ரூ.100/– மதிப்புள்ள முத்திரைதாளில் ஒப்பந்த ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளவும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேற்காணும் அறிவிப்பின்படி, தமிழ்நாடு தேயிலைதோட்ட கழக பிரிவு மேலாளர் அவர்களால் ஒப்பந்த ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டும், 12 மாத

வாடகை முன்வைப்புத் தொகை ரூ.26,400/– 02.08.2021ல் செலுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் விவரப்படி ஒப்பந்த ஆவணம் மற்றும் 12 மாத வைப்புத் தொகை செலுத்தியதன் அடிப்படையில், இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.389/2021/அ3, நாள்.19.08.2021ன்படி அறிஞர் அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் 8' x 8' அளவில் மாத வாடகை ரூ.2200/– வீதம் நிர்ணயம் செய்து 01.08.2021 முதல் 31.07.2024 முடிய நடத்திக்கொள்ள உரிமம் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

- இந்நிலையில் திரு.க.தமிழரசன், தலைவர், கருத்துரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு, கோவில்பட்டி என்பவரால் அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு தோட்ட கழகம் சார்பாக டேன் டீ அமைக்கப்பட்டதற்கு ஆட்சேபனை தெரிவித்தும், அம்மா உணவக தற்காலிக அறையினை மறைத்தும், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ளது என்றும் தனியார், பெட்டியினை அகற்ற கோரி ஆட்சேபனை கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும் கோவில்பட்டி நகராட்சி பகுதி சமூக ஆர்வலர்கள் மற்றும் முன்னாள் கவுன்சிலர்கள் தமிழ்நாடு தோட்ட கழகம் சார்பாக டேன் டீ விற்பனை நிலையம் அமைக்கப்பட்டதற்கு ஆட்சேபனையினை தெரிவித்தும், தனியார் பெட்டியினை அகற்ற கோரியும் நேரில் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

- மேற்காணும் ஆட்சேபனை மற்றும் கோரிக்கைகள் மற்றும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் நகராட்சி நிர்வாகத்தால் மாற்று இடம் தேர்வு செய்து வழங்கும் வரையில் ஏற்கனவே தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம் சார்பாக டேன் டீ விற்பனை நிலையம் வைக்கப்பட்டுள்ள இடத்தினை மாற்றம் செய்து அப்புறப்படுத்தி வைக்குமாறு, தமிழ்நாடு தேயிலை தோட்ட நிறுவனத்திற்கு இவ்வலுவலக ந.க.எண்.389/2021/அ3 நாள்.20.12.2021ம் தேதிய அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேலும் மேற்காணும் அறிவிப்பில் அப்புறப்படுத்த தவறும் பட்சத்தில், பொதுமக்களுக்கு இடையூறாக டேன் டீ விற்பனை நிலையத்தினை நகராட்சி நிர்வாகத்தால் மாற்றி அப்புறப்படுத்துவதோடு மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமம் நிபந்தனைகள் வரிசை எண்.10ல் அறிவுறுத்தியவாறு, முன்னறிவிப்பின்றி குத்தகையினை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது.

- மேற்காணும் அறிவிப்பின்படி மனுதாரரால் டேன் டீ விற்பனை நிலையத்தினை அப்புறப்படுத்தாத காரணத்தினால், இந்நகர்மன்ற தீர்மான எண்.4469, நாள்.29.12.2021ல் இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.389/2021/அ3, நாள்.19.08.2021 ம் தேதிய கடிதத்தில், தமிழ்நாடு தேயிலை தோட்டக்கலை நிறுவனம், குன்னூருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் இரத்து செய்வதற்கு மன்றம் அனுமதி வழங்கியுள்ளது. மேற்காணும் மன்றம் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில், அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில், தமிழ்நாடு தேயிலை தோட்ட நிறுவனம் டேன் டீ விற்பனை நிலையம் அமைப்பதற்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமம் இரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

3) இப்புகார் மனு தொடர்பாக 27.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் ஆகியோருக்கு 19.01.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

27.01.2022 அன்று நேரடி விசாரணைக்கு மனுதாரரான திருமதி.வஹிதா இக்பால் என்பவருக்கு பதிலாக அவரது கணவர் திரு.முகம்மது இக்பால் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

"தமிழ்நாடு அரசு தேயிலை தோட்டக் கழகத்தின் சார்பாக (TAN TEA) கோவில்பட்டி நகராட்சி பேருந்து நிலையத்தில் டேன் டீ விற்பனை நிலையம் அமைக்க எனது மனைவி பெயரில் நகராட்சி நிர்வாக ஆணையரால் கடந்த பிப்ரவரி மாதம் 2021–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பின்னர் 6 மாதம் கழித்து கோவில்பட்டி நகராட்சியால் கோவில்பட்டி அண்ணா பேருந்து நிலையத்தில் டேன் டீ விற்பனை நிலையம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கோவில்பட்டி பேருந்து நிலையத்தில் மேற்கண்ட நிலையத்திற்கான பாக்ஸ் அமைத்து அதில் வயரிங் வேலையும் முடிந்த நிலையில், மேற்கண்ட கடைக்கான உரிமம் நகராட்சியால் ரத்து செய்யப்பட்டுள்ளது என தெரிவித்து, மேற்கண்ட பாக்ஸ், வயரிங் மற்றும் அனைத்து பொருட்களையும் அகற்றி எனக்கு பெருத்த நட்டத்தை ஏற்படுத்திவிட்டனர். மேற்கண்ட பேருந்து நிலையத்தில், அனுமதி பெறாமல் கடைகள் தற்போது இயங்கி வருகின்றன, தற்போது மேற்கண்ட பேருந்து நிலையத்தில் டேன் டீ விற்பனை நிலையம் அமைப்பதற்கு பதிலாக வேறு இடத்தை தேர்வுசெய்து தெரிவிக்குமாறு நகராட்சியினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பஸ் நிலையத்திற்கு வெளியே இரண்டு இடங்களை சுட்டிக்காட்டிய பின்னரும், அதனையும் போக்குவரத்திற்கு இடையூறு என தெரிவித்து எங்களுக்கு ஒதுக்கித் தர நகராட்சியினர் மறுத்துவிட்டனர்.

எனவே பேருந்து நிலையத்தில் டேன் டீ விற்பனை நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரைத்துள்ள நிலையில், நான் சுட்டிக்காட்டியுள்ள இரண்டு இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் மேற்கண்ட கடையை நடத்திட ஆவன செய்திடுமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்து இந்நேர்வு தொடர்பான புகைப்பட நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

4) 27.01.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு கோவில்பட்டி நகராட்சி ஆணையர் சார்பில் கோவில்பட்டி நகராட்சி வருவாய் ஆய்வாளர் (பொறுப்பு) அவர்கள் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

"கோவில்பட்டி நகராட்சி அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் டேன் டீ நிலையம் அமைக்க திருமதி வஹிதா இக்பால் என்பவருக்கு 2021 பிப்ரவரி மாதம் நகராட்சி நிர்வாக ஆணையரால் அனுமதியளிக்கப்பட்டு, 2021 ஆகஸ்ட் மாதம் அவருக்கு நகராட்சியால் அனுமதி அளிக்கப்பட்டது என்றும் பின்னர் அங்கு ஏற்பட்ட ஆட்சேபனைகளைத் தொடர்ந்து மேற்கண்ட டேன் டீ நிலையத்திற்கான அனுமதி நகராட்சி ஆணையரால் ரத்து செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக கோவில்பட்டி நகராட்சி ஆணையரின் 25.1.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

5) இப்புகார் மனு தொடர்பாக மனுதாரரின் மனு, மனுதாரரின் சார்பாக அவர் கணவர் திரு.முகமது இக்பால் அவர்கள் அளித்த வாக்குமூலம் மற்றும் கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, நகராட்சி ஆணையர் சார்பாக வருவாய் அலுவலர் அளித்த வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரருக்கு அறிஞர் அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் டேன் டீ நிலையம் அமைக்க மாத வாடகை ரூ.2,200/– நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4184/2021/ஆர்3, நாள்.25.02.2021 ல் ஆணை பிறப்பித்துள்ளார். மனுதாரர் 12 மாத வாடகை முன்வைப்புத் தொகை ரூ.26,400/– செலுத்தியுள்ளார். நகராட்சி நிர்வாகமும் அறிஞர் அண்ணா பழைய பேருந்து நிலையத்தில் 8' x 8' அளவில் மாத வாடகை ரூ.2,200/– வீதம் நிர்ணயம் செய்து 01.08.2021 முதல் 31.07.2024 முடிய நடத்திக் கொள்ள உரிமமும் வழங்கியுள்ளது. இந்நிலையில் பேருந்து நிலையத்தில் டேன் டீ அமைக்க பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் நகராட்சி நிர்வாக ஆணையர் அளித்த குத்தகை உரிமத்தை ரத்து செய்துள்ள கோவில்பட்டி நகராட்சி நிர்வாகம் மனுதாரருக்கு மாற்று இடம் வழங்காமல் மனுதாரரை அலைகழிப்பது ஏற்கக்கூடிய செயலாக இல்லை, நகராட்சி நிர்வாக ஆணையரின் உத்தரவின்படி பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் எந்தவித இடையூறும் இல்லாத வகையில் வேறு இடத்தை தேர்வு செய்து மனுதாரர் டேன் டீ விற்பனை நிலையம் அமைக்க உரிய நடவடிக்கையினை எடுத்திடுமாறு கோவில்பட்டி நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

6) நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒதுக்கீடு உத்திரவை ரத்து செய்து, கோவில்பட்டி நகராட்சி ஆணையர் தனி அலுவலர் நிலையில் தீர்மானம் இயற்றியிருப்பது கண்டிக்கத்தக்கது. நகராட்சி நிர்வாக ஆணையரின் அதிகாரத்தை இவர்கள் தரம்தாழ்த்தி செய்ததும் கண்டிக்கத்தக்கது. The Director of Municipal Administration is instructed to initiate severe disciplinary action against the Commissioner, Kovilpatti Municipality for his gross disobedience, defiance and dereliction of duties by abusing his position as Special Officer and passing resolution against the allotment orders issued by the Commissioner of Municipal Administration. It betrays an impudent sense of audacity, brazen behavior and lack of knowledge of rules and office procedure. The Municipal Commissioner has not taken any action against the illegal commercial encroachments inside the Bus Stand (Photos submitted by the petitioner) for reasons best known only to him.

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி.M.வஹிதா இக்பால்
17/6, வத்தலக்குண்டு ரோடு,
பேகம்பூர், திண்டுக்கல்.

2) நகராட்சி ஆணையர்,
கோவில்பட்டி நகராட்சி,
கோவில்பட்டி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்.